அம்பத்துார் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No. 540/2015

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திருமதி. உ. தாரணி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873 ம் ஆண்டின் 10 வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2026 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 05–ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| வா.சா.1 | 05.02.2026 |
| பெயர் சங்கீதா | தந்தை/ கணவர் பெயர் |
| தொழில் | வயது |
| இனம் | சமயம் |
| கிராமம் | வட்டம் |

குறுக்கு விசாரணை:–

1. நான் என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சங்கர் எங்களை தொந்தரவு செய்யகூடாது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து கொரட்டூர் கிராமத்தில் ஸ்ரீநிவாசபுரம், 3 வது மெயின் ரோடில், ஏரிகரை தெருவில் உள்ளது. தாவா சொத்தின் சர்வே எண் சரியாக ஞாபகம் இல்லை. எனது பிராதில் மேற்கூறிய விவரம் தான் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். தாவா சொத்தின் எல்லைகள் ஞாபகம் இல்லை. நான் தற்போது தாவா சொத்தில் தான் குடியிருக்கிறேன் என்றால் சரிதான். ஆனால் எனக்கு 4 பக்க எல்லைகள் தெரியாதா என்றால் ஆட்கள் மாறிகொண்டே இருப்பதால் தெரியவில்லை. தாவா சொத்து எனது முன்னோர் சொத்து என்பதை காட்டுவதற்கு ஆவணம் தாக்கல்

செய்துள்ளேனா என்றால் 2011 வருடத்தில் வீடு எரிந்துவிட்டதால் ஆவணங்கள் எரிந்துவிட்டது. தாவா சொத்து எனது கணவரின் முன்னோர் சொத்து ஆகும். என்கணவருடைய தாத்தா வழிமுறை சொத்து ஆகும்.

2. தாவா சொத்து ஐயாலுநாயுடு என்பவருக்கு பாத்தியப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்கூறிய ஐயாலுநாயுடு என்பவர் யார் என்ற விவரம் எனக்கு தெரியாது. பிரதிவாதி எனக்கு உறவினரா என்றால் இல்லை. வழக்கு தாக்கல் செய்யும் போது தான் எனக்கு தெரியும். பிரதிவாதி 2013 வருடம் 6 வது மாதம் 2 ம் தேதி எங்களுடைய வீட்டை எரித்துவிட்டார். அதுசம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். பிரதிவாதி எரித்ததை நான் கண்ணால் பார்த்தேனா என்றால் ஆமாம். அதனை புகைப்படம் எடுத்துவைத்தேனா என்றால் இல்லை.

3. மீண்டும் 2015 வருடத்தில் பிரதிவாதியிடம் பிரச்சனை ஏற்பட்டதா என்றால் ஆமாம். யார் பிரச்சனை செய்தது என்றால் பிரதிவாதி தான் பிரச்சனை செய்தார். நான் கூறுவது பொய்என்றாலும் நாங்கள் செய்த பிரச்சணைகாக பிரதிவாதி தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. 2011 வருடத்தில் நாங்கள் தான் முதலில் பிரதிவாதியிடம் பிரச்சணைசெய்து அதற்கு 19.04.2011 அன்று பிரதிவாதி எங்கள் மீது புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்து உரிமை காட்டும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியாது. எந்த அனுமானத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் பூர்விகமாக எனது கணவர் வீட்டில் இருந்து வந்த சொத்து என்பதால் சாட்சியம் அளிக்கிறேன்.

4. 2011 வருடம் எனது கணவர் என்பெயரில் தாவா சொத்தை

செட்டில்மென்ட் எழுதிவைத்துள்ளார். தாவா சொத்து சர்வே எண் மற்றும் பிரதிவாதி சொத்தின் சர்வேஎண் வேறுவேறு என்றால் சரியல்ல. 2 சர்வே எண்களும் ஒன்று தான் என்றாலும் நான் கோரும் சொத்தும் பிரதிவாதி கோரும் சொத்தும் ஒன்று தான் என்றாலும் சரிதான். பிரதிவாதி தாக்கல் செய்த பதில்உரையை நான் படித்துபார்க்கவில்லை அதில் என்னவிவரம் என்று எனக்கு தெரியாது.

(பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டி ஒத்திவைக்கப்படுகிறது)